**செ. கு. எண்: 182** **நாள்: 23.11.2017**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 23.11.2017

---

முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு.ஹபிபுல்லா பாஷா அவர்கள் நேற்று (22.11.2017) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரம் அடைந்தேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முத்த வழக்கறிஞராகவும், மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் சிறப்பு அரசு வழக்கழறிஞராகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அட்வகேட் ஜென்ரலாகவும் பதவி வகித்த பெருமைக்குரியவர் திரு. ஹபிபுல்லா பாஷா அவர்கள்.

நல்ல பண்பாளரும், பழகுவதற்கு இனிமையானவருமான திரு. ஹபிபுல்லா பாஷா அவர்கள், பல கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக பாடுபட்ட பெருமைக்குரியவர் ஆவார்.

திரு. ஹபிபுல்லா பாஷா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா சொர்க்கத்தில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**